**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு மார்ச் மாதம் 14-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எஸ்.விஜய் அழகிரி, பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.1164/2023

வா.சா.1 கிருஷ்ணதனராஜ்

குறுக்குவிசாரணை பிரதிவாதி தரப்பில்

நான் 9ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். எனக்கு தொழில் விவசாயம். எனக்கு 4 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. இந்த இடம் என்னுடைய பெயரில் உள்ளது. விவசாய தொழில் இல்லாமல் நான் ரியல் எஸ்டெட் புரோக்கர் தொழில் செய்து வருகிறேன். எனக்கு வேறு விதத்தில் வருமானம் கிடையாது. நான் பைனான்ஸ் தொழில் செய்யவில்லை. இந்த வழக்கு தவிர வேறு யாருக்கும் கடன் கொடுக்கவில்லை என்றால் 1, 2 பேருக்கு கொடுத்திருக்கிறேன். வட்டிக்கு கொடுப்பேனா, கைமாற்று கடனாக கொடுப்பேனா என்றால் சில சமயம் வட்டிக்கு கொடுப்பேன். சில சமயம் கைமாற்று கடனாக கொடுப்பேன். அந்த 1, 2 பேர் என்பது தெரிந்த நபர்களா என்றால் தெரிந்த நபர்களுக்கும், பழக்கமானவர்களுக்கும் கொடுப்பேன். நல்ல அறிமுகமான, பழக்கமானவர்களுக்கு மட்டும் தான் தருவேன். வட்டிக்கு கொடுக்கும் போது என்ன ஆவணம் வாங்குவேன் என்றால் சிலசமயம் நம்பிக்கையின் பேரில் கொடுப்பேன். சிலசமயம் பாண்டு, செக் வாங்குவேன். கடன் கொடுக்கல், வாங்கல் சம்மந்தமாக நான் கணக்கு பராமரித்து வருகிறேனா என்றால் இல்லை. எனக்கு இரண்டு வங்கிகளில் வங்கி கணக்கு உள்ளது. அந்த இரண்டு வங்கி கணக்கிலும் வங்கி கணக்கிற்கும் காசோலை வசதி இருக்கிறது. இந்த வழக்கில் என்னை தவிர எனது தரப்பில் வேறு சாட்சி விசாரிக்க போகிறேனா என்றால் இல்லை. வேறு சாட்சி இல்லை என்பதால் நான் எனது தரப்பில் வேறு சாட்சி விசாரிக்கவில்லையா என்றால் ஆமாம். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் வக்கீல் வைத்து நோட்டிஸ் அனுப்பினேனா என்றால் ஆமாம். அந்த நோட்டீசிற்கு விவரங்கள் நான் தான் கூறினேன். நோட்டிசில் இந்த வழக்கு

காசோலை சம்மந்தமான வரவு, செலவு கணக்கு விவரங்களை சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். நோட்டீஸ் அனுப்புவதற்கு பிரதிவாதியின் விலாசத்தை நான் தான் சொன்னேன். பிரதிவாதியின் இரண்டு விலாசத்தை கொடுத்தேன். பிரதிவாதியின் வீட்டு முகவரி மற்றும் ஸ்கூல் முகவரி கொடுத்தேன். பிரதிவாதியை எனக்கு 7, 8 வருடங்களாக தெரியும். பிரதிவாதியை எந்த வகையில் தெரியும் என்றால் அவரது கணவர் வகையில் தெரியும். பிரதிவாதியின் கணவர் பெயர் முருகேசன். பிரதிவாதியின் கணவரும் வாத்தியாராக தான் இருக்கிறார். பிரதிவாதியின் கணவர் மாதம் எவ்வளவு சம்பளம் வாங்குகிறார் என்றால் சம்பளம் வாங்குவதாக சொன்னார் எவ்வளவு என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் பிரதிவாதியிடம் பேசுவேனா அல்லது அவரது கணவரிடம் பேசுவேனா என்றால் இரண்டு பேரிடமும் பேசுவேன். இரண்டு பேரிடமும் சிலசமயம் நேரிலும் பேசுவேன். சிலசமயம் தொலைபேசியிலும் பேசுவேன். பிரதிவாதியிடம் கடைசியாக எப்போது சந்தித்து பேசினேன் என்றால் பணம் வாங்குவதற்கு 20 நாட்களுக்கு முன்பு சந்தித்து பேசினேன். அதன்பிறகு பிரதிவாதியை நேரில் சந்தித்து பேசினேனா என்றால் காசோலை திருப்பப்பட்ட பிறகு நேரில் சந்தித்து பேசினேன். மேற்படி இரண்டு சந்திப்புகளுக்கும் நடுவில் நான் பிரதிவாதியை நேரில் சந்திக்கவில்லை என்றால் சரிதான். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் பிரதிவாதியை எப்படி தெரியும் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பில் பிரதிவாதி என்றைக்கு தொகை கேட்டார் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பில் வழக்கு காசோலையை வங்கியில் தாக்கல் செய்தால் வசூலாகிவிடும் என்று பிரதிவாதி உறுதியளித்ததாக நான் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு சம்பளம் அதிகமா அல்லது பிரதிவாதியின் கணவருக்கு சம்பளம் அதிகமா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கறிஞர் அறிவிப்பில் வட்டியைப் பொறுத்து பேசியதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் அறிவிப்பில் வட்டி குறித்து சொல்லவில்லை என்றும், தற்போது நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியைவிட பிரதிவாதியின் கணவர் அதிகமாக சம்பளம் வாங்குகிறார் என்றால் அது எனக்கு தெரியாது. நான் வழக்கிற்காக

தெரியாது என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியை பிரதிவாதியின் கணவர் மூலமாக எனக்கு தெரியும் என்று நான் சொல்லியுள்ள நிலையில் பிரதிவாதியின் கணவருக்கு கடன் கொடுக்காமல் ஏன் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன் என்றால் சிலசமயம் இரண்டு பேரும் சேர்ந்து வாங்குவார்கள். சிலசமயம் தனித்தனியாக வாங்குவார்கள். பிரதிவாதி என்னிடம் தனியாக வாங்கினார். இதுபோல் எத்தனை முறை என்னிடம் இவர்கள் பணம் வாங்கியிருப்பார்கள் என்றால் 4, 5 தடவை வாங்கியிருப்பார்கள். அந்த கடனுக்கு ஆதரவாக நான் என்னென் ஆவணங்கள் வாங்குவேன் என்றால் 1, 2 தடவை எதுவும் வாங்காமல் கொடுத்திருக்கிறேன். 1, 2 தடவை செக் வாங்கிக் கொண்டு கொடுத்திருக்கிறேன். பிரதிவாதி என்னிடம் எப்பொழுதுமே நேரில் வந்து கடன் வாங்கியது கிடையாது என்று சொன்னால் சரியல்ல. என்னை யார் என்றே பிரதிவாதிக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியிடம் நான் ரூ.4,10,000 கடன் கொடுத்ததற்கு பிரதிவாதி என்னிடம் ரூ.4,10,000/- பெற்றுக்கொண்டேன் என்பதற்கு பிரதிவாதியிடம் ரசீது எழுதி வாங்கினேனா என்றால் ரசீது எழுதி வாங்கவில்லை. நான் உண்மையாகவே கடன் கொடுத்திருந்தால் ரசீது வாங்கியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் வட்டியை பொறுத்து உறுதிமொழி பத்திரமோ, பிராமிசரி நோட்டோ எழுதி வாங்கியிருக்கிறேனா என்றால் இல்லை. பிரதிவாதி வட்டி தருவதாக உறுதியளித்தன்பேரில் தான் நான் வழக்கில் வட்டி கேட்டிருக்கிறேன் என்றால் சரிதான். சட்டப்படி கடன்தொகை திரும்ப வராததால் நஷ்டம் ஏற்பட்டுவிட்டதாக சொல்லி நான் வட்டி கேட்கவில்லையென்றால் நான் வட்டிக்கு தான் பணம் கொடுத்திருக்கிறேன். உண்மையாகவே நான் வட்டிக்கு கடன் கொடுத்திருந்தால் வட்டியையும் கேட்டு நான் வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பொய் வழக்கு என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு வீட்டு முகவரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு என்ன ஆனது என்று வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவாவில் பிரதிவாதியின் வீட்டு முகவரியாக நோட்டீசில் சொல்லியுள்ள வீட்டு முகவரியை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். வீட்டு முகவரியை சொல்லாததற்கு குறிப்பிட்டு காரணம் இருக்கிறதா என்றால் அதுபற்றி எனக்கு

தெரியாது. வழக்கறிஞருக்கு தான் தெரியும். வீட்டு முகவரியாக வழக்கறிஞர் நோட்டீசில் சொல்லியிருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. வீட்டு முகவரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் நோட்டீஸ் சரியான முகவரி அல்ல என்பதால் திருப்பப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. எனக்கு பிரதிவாதியை யார் என்றே தெரியாது என்றும், வழக்கிற்காக பிரதிவாதியை தெரியும் என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் நான் வேண்டுமென்றே வீட்டு முகவரியை மறைத்து பொய்யாக தாவா தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சுத்த கைகளுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்துள்ள காசோலை யாரால் பூர்த்தி செய்யப்பட்டது என்றால் அவர் வரும்போதே காசோலையை பூர்த்தி செய்து கொண்டு வந்திருந்தார். பிரதிவாதி என்னிடம் எப்போது கடன் கேட்டார் என்றால் என்னிடம் கடன் வாங்கியதிலிருந்து சுமார் 20 நாட்களுக்கு முன்பு கடன் கேட்டார். எவ்வளவு தொகை கேட்டார் என்றால் 4 லிருந்து 5 லட்சம் கேட்டார். எதற்காக கடன் கேட்டார் என்றால் குடும்ப அவசர தேவைக்காக கேட்டார். என்ன குடும்ப அவசர தேவை என்றால் அதை சொல்லவில்லை. அதைபற்றி நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எப்போது பணம் கொடுத்தேன் என்றால் 02.07.2023 அன்று வரச்சொல்லி ரூ.4,10,000/- கொடுத்தேன். அந்த பணம் எனக்கு எப்படி வந்தது என்றால் எனக்கு விவசாய வருமானம் மூலம் வந்தது. பணம் தயாராக இருப்பது குறித்து நேரில் சொன்னேனா அல்லது போன் மூலமாக சொன்னேனா என்றால் போன் மூலமாக சொன்னேன். எவ்வளவு தொகை தயாராக உள்ளது என்று அவர் வந்தபிறகு சொன்னேனா என்றால் ரூ.4,10,000/- தயாராக இருப்பதாக போன் மூலமாகவே சொல்லிவிட்டேன். பணம் தயாராக இருப்பதாக நான் யாருடைய போனுக்கு சொன்னேன் என்றால் ஜீவப்பிரியா போனுக்கு சொன்னேன். நான் எத்தனை போன் நெம்பர் வைத்திருக்கிறேன் என்றால் இரண்டு நெம்பர் வைத்திருக்கிறேன். ஒரு நெம்பர் 9842750790, இன்னொரு நெம்பர் ஞாபகமில்லை. அடுத்த வாய்தாவில் வரும்போது ஞாபகப்படுத்தி சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியும். பிரதிவாதியின் போன் நெம்பர் தெரியுமா என்றால் தெரியும். சொல்லமுடியுமா என்றால் ஞாபகமில்லை. எனது இரண்டு போன்

நெம்பரிலிருந்து பிரதிவாதியின் போனுக்கு குறிப்பிட்ட நாட்களில் போன் போனதா என்பது குறித்து ஆய்வு செய்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. எனது இன்னொரு போன் நெம்பரும் பிரதிவாதியின் போன் நெம்பரும் எனது போனில் பார்த்து சொல்லமுடியுமா என்றால் நான் நோட்டில் தான் எழுதி வைத்திருக்கிறேன். எந்த நோட்டில் எழுதிவைத்திருக்கிறேன் என்றால் ஒரு சிறிய நோட்டில் எழுதி வைத்திருக்கிறேன். அவரது நெம்பர் மட்டும் எழுதிவைத்திருக்கிறேனா என்றால் ஒருசில நெம்பர் எழுதிவைத்திருக்கிறேன். அடுத்த வாய்தாவில் அந்த நோட்டை ஆஜர் செய்ய இயலுமா என்றால் இயலும்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**